ஊ. குமாரசாமி.
சம்புகுளம்,

எனக்கு 5 பிள்ளைகள் கணவருக்கு நரம்பு தளர்ச்சி வருத்தம் இருந்தது நான்கு பிள்ளைகளும் பாடசாலையில் படிக்கின்றார்கள். நான் தான் கிடைக்கும் தோட்ட வேலைகளுக்கு சென்று பிள்ளைகளுக்கு ஒரு நேர சாப்பாடு என்றாலும் கொடுத்து வந்தேன் பிள்ளைகள் ஆசைப்பட்டது எதையுமே என்னால் வாங்கி கொடுக்க முடியவதில்லை அந்த நேரம் எனக்கு எல்லா பிள்ளைகளுக்கும் மருந்தை கொடுத்து நானும் செத்துப்போவோமா என்ற எண்ணம் கூட எனக்கு வந்தது. சரியான மன உளைச்சலில் இருந்த நேரம் தான் இந்த பல்மைரா நிறுவனத்தில் வேலை செய்யும் பிள்ளைகள் என்னை வீட்டில் வந்து சந்தித்து ஆறுதல் கூறி என்னை சுய உதவிக்குழுவில் இணைத்து விட்டார்கள் அங்கு சென்றதும் அந்த குழுவில் இந்த பிள்ளைகள் நிறைய விடயங்களை சொல்லி தந்தார்கள் அதனால் என்ர வாழ்க்கையில் சின்ன சின்ன மாற்றங்கள் வந்தது. நான் சுயமாக சிறுதோட்டம் கோழி போன்றவற்றை வளர்த்தேன் சேமிப்பு பழக்கமும் எனக்கு ஏற்பட்டது அதன் பின் என் ஈடுபாட்டை பார்த்த நிறுவனம் ஒரு வாழ்வாதாரமாக ஒரு நல்லின பசுவை தந்தார்கள் அதில் வரும் வருமானத்தில் என்னுடைய பிள்ளைகளுக்கு கல்விக்கு ஊக்கமளிப்பும் செய்து வருகிறேன் முன்னர் எல்லாவற்றுக்கும் கணவனின் கையையே எதிர்பார்த்தும் கூலிவேலையை எதிர்பார்த்தும் இருந்தனான் இப்போது இவ்வாழ்வாதாரம் மூலம் கிடைக்கும் சிறுதொகை பணத்தில் பிள்ளைகளுக்கு பட்டினி இன்றி உணவளிப்பது எனக்கு திருப்தியையும் தன்னம்பிக்கையையும் தந்தது. எனக்கு இந்த உதவியை தந்த எனது பல்மைரா அண்ணாக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்வதோடு உங்களால் தான் எங்கட குடும்பம் இப்போது உயர்வோடு வாழ்கிறது இந்த பணியை இன்னும் 100 ஆண்டு உங்களை வாழவைக்கும். இது போன்ற பல பெண்கள் கஷ்டத்தில் உள்ளார்கள் அவர்களுக்கும் உதவி செய்து நீங்கள் சிறப்பாக வாழவேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன் நன்றி அத்தோடு எனது மூன்று பிள்ளைகள்